**20.11.2025**

**MCOP.No.55/2017**
**ம.சா.1 : பெரியசாமி**
**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து சமயத்தில் என் அப்பா கொடுத்த புகாரில் அவரது வயது 70 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. அவரது வயது 60 தான். நான் ஒப்படைத்துள்ள காய சான்றிதழில் வயது 70 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பழனிசாமி, முருகன், ஜோதி மற்றும் எனக்கு ஆகிய எங்களுக்கு வயது சுமார் 40க்கு மேல் ஆகிவிட்டது என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் அவரவர்கள் தனித்தனியாக சம்பாதித்து தான் குடும்பத்தை நடத்துகிறோம் என்றால் சரியல்ல. ஒரே வீட்டில் தான் கூட்டு குடும்பமாக ஒன்றாக இருக்கிறோம்.

2) நாங்கள் கூட்டுகுடும்பமாக வசிப்பதற்கு ஆதார் அட்டை தாக்கல் செய்யவிடல்லை என்றால் சரியல்ல. இந்த மனுவிற்கான நான் பொய்யாக ஒரே வீட்டில் தான் கூட்டு குடும்பமாக வசிப்பதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து சமயத்தில் மாருதி கார் ஓட்டிய ஓட்டுநர் நிதானமாகவும் கவனமாகவும் சரியான திசையில் தான் வந்து கொண்டு இருந்தார் என்றும் எனது அப்பா தான் அவரது வயது மூப்பின் காரணமாக போக்குவரத்தை சரியாக கவனிக்காமல் எவ்வித சைகையும் கொடுக்காமல் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி ரோட்டை கடக்க முயற்சிக்கும் போது இந்த விபத்து ஏற்பட்டது என்றால்  சரியல்ல. அதனால் தான் எனது அப்பா ஓட்டி சென்ற வாகனத்தில் முன் புறம் சேதாரம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) காருக்கு வலது பக்கத்தில் தான் சேதம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல இந்த காரின் ஓட்டுநர் எனது அப்பாவின் வாகனத்தின் பின்புறமாக மோதிவிட்டார் என்று சொல்வது தவறு. என் தகப்பனார் இடது புறமாக சென்றுவிட்டார். இந்த விபத்துக்கு பின்னிட்டு 28.12.2016க்கு

தொடர் சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா இயற்கையான முறையில் தான் இறந்தார் என்றால் அடிபட்ட காயத்தின் காரணமாக தான் இறந்தார். ஆனால் அவர் இறந்ததற்கு அவரது உடல் கூறாய்வு எதுவும் செய்யவில்லை. உண்மையாகவே அவர் விபத்தின் மூலம் இறந்திருந்தால் மேல் சிகிச்சைக்கு சென்றிருப்பார் என்றும் இயற்கையான முறையில் இறந்ததால் தான் தொடர் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4) இந்த விபத்து சமயத்தில் என் அப்பா எவ்வித வேலைக்கும் செல்லவில்லை என்றும் நாங்கள் அவரை சார்ந்திருந்தோம் என்று மனுவிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது அப்பாவின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் தான் பின் யோசனை செய்து ஒரு நாளுக்கு பின்னிட்டு புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஒப்படைத்துள்ள மருத்துவ பில்களில் ரூ.83202/- மட்டுமே முறையாக உள்ளது என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள தொகைகள் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது தகப்பனாரின் கவனக்குறைவு தான் காரணம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.20 18:00:09 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**